<u>சார்பு நீதிமன்றம், செஞ்சி</u>

அ.வ.எண்.168/2022 நாள்.15.04.2025

2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர் | தொழில் | |
| த.பெ/க.பெ. | பழனி | சாதி | |
| கிராமம் | கொடுக்கன்குப்பம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 51 |

**<u>வா.சா.1</u>**
**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் **1-ம்** சாட்சி ஆவேன். நான் வா.**சா.1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு, கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**<u>ஆவணங்கள்</u>**

1. வா.சா.ஆ-1 - 22.01.2020ல் வழக்கு அ அட்டவணை சொத்து சம்மந்தமாக எழுதப்பட்ட விற்கிரைய உடன்படிக்கை பத்திர அசல்
2. வா.சா.ஆ-2- 07.01.2013ல் ஒரு ஜெயபாலன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான சான்றிட்ட பத்திர நகல்
3. வா.சா.ஆ-3- 03.02.2020ல் வழக்கு ஆ அட்டவணை சொத்து சம்மந்தமாக எழுதப்பட்ட விற்கிரைய உடன்படிக்கை பத்திர அசல்
4. வா.சா.ஆ-4- 02.09.2002ல் ஒரு நாராயணசாமி என்பவர் தானமாக கொடுத்ததற்கான சான்றிட்ட பத்திர நகல்
5. வா.சா.ஆ-5 30.06.2022ல் அ அட்டவணை சொத்திற்கு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பிற்கான அலுவலக நகல்
6. வா.சா.ஆ-6- மேற்படி 30.06.2022ந் தேதியில் அ அட்டவணை சொத்திற்கு எனது வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி கடந்த 09.07.2022ல் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை
7. வா.சா.ஆ-7- 27.07.2022 தேதியில் தாவா ஆ அட்டவணை சொத்து பிரதிவாதிக்கு பாத்தியம் என காட்டும் சிட்டா

8. வா.சா.ஆ-8- 30.06.2022ல் வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல்
9. வா.சா.ஆ-9 - 09.07.2022 தேதியில் மேற்படி வாதியின் வழக்கறிஞர் நோட்டீஸ் சார்வு ஆனதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).
(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)